23.01.2024 OS.No. 155/2018

சாட்சி : PW 1அமுதா

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை : (9முதல் 12, 13,17,18 பிரதிவாதிகள் வழக்கறிஞர்)**

தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 79 சென்ட். மேற்படி விஸ்தீரணம்பற்றி பிராது சொத்து விபரத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். தாவா சொத்துக்கு செட்டில்மென்ட் காலத்தில் சர்வே எண் ஞாபகம் இல்லை. செட்டில் மென்ட் காலத்தில் என் தகப்பனார் அழகப்பன் பெயரில் பட்டா இருந்தது. வா.சா.ஆ 2 கிரையப்பத்திரத்தில் சர்வே எண் இல்லை என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்தும் தாவா சொத்தும் வெவ்வேறானவே என்று சொன்னால் சரியல்ல. செட்டில் மென்ட்க்கு பிறகுதான் எனது பாட்டனார் மூக்கையா சேர்வை வா.சா.ஆ 2 கிரையம் வாங்கினார். செட்டில் மென்ட் பட்டா என்றால் என்ன என்று தெரியாது. வா.சா.ஆ 2 கிரையப்பத்திரம் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. ( பிரதிவாதிகள் வழக்கறிஞரின் கோரிக்கை ஏற்று குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது)

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.